DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR
**Case No: CC.No.42/2021**
Prosecution witness- **PW.4**

| | | | |
|---|---|---|---|
| Name | : Tr.Logesh Vikram | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : 12:15 p.m. to 12:25 p.m. | | |

**(Accused A2 present. A1 absent. Petition U/s.355 of BNSS filed through Online, allowed. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 29.05.2025

29.05.2025 முதல் விசாரணை

நான் தற்பொழுது தேனிமாவட்டம் கம்பம் மேற்கு வனச்சரகத்தில் வனக்காப்பாளராக பணிபுரிந்து வருகிறேன்.

1) இதற்கு முன்பு 06.11.2020ம் தேதி குன்னூர் வனச்சரகத்தில் வனக்காப்பாளராக பணிபுரிந்து வந்தபோது அன்றையதினம் இரவு 08.00 மணிக்கு பிரபு என்பவர் எனக்கு போன் செய்து சேலாசலிருந்து கொலக்கம்பை செல்லும் வழியில் கக்காச்சிக்கு கீழ்புறமாக சோலட்டிமட்டத்தில் சிறுத்தை ஒன்று இறந்துகிடப்பதாக தகவல் கொடுத்தார். உடனடியாக நான் வனவர் சபரீசன், வனச்சரகர் சசிக்குமார், உலிக்கல் பீட் வனக்காப்பாளர் நாகராஜ் ஆகியோர்களுக்கு போன் மூலமாக தகவல் கொடுத்தேன்.

2) பின்னிட்டு சம்பவஇடத்திற்கு நானும் நாகராஜுூம் இரவு 08.30 மணிக்கு சென்றோம். எங்களுக்கு அடுத்ததாக ரேஞ்ச் ஆபிசர் சசிக்குமாரும் வனவர் சபரீசனும் அங்கு வந்தார்கள். நாங்கள் பார்த்தபோது சிறுத்தையின் கழுத்தில் இருசக்கர வாகனத்தின் பிரேக் ஒயர் மாட்டி அந்த ஒயர் புகையிலை செடியில் மாட்டி சிறுத்தை இறந்து கிடந்தது. அன்று இரவு நேரமாகிவிட்டதால் பிரேத பரிசோதனை

செய்ய முடியாது என்பதால் இரவு முழுவதும் அங்கேயே பாதுகாப்புக்காக தங்கியிருந்தோம்.

3) மறுநாள் காலை 10.00 மணியளவில் சேலாஸ் கால்நடை மருத்துவர் விஜயகுமார், கேத்தி கால்நடை மருத்துவர் கண்ணன் ஆகியோர் சம்பவஇடத்திற்கு வந்தார்கள். மேலும் என்.ஜி.ஓஸ் விஜய், விஜய்கிருஷ்ணன் ஆகிய இருவரும் வந்தார்கள். உலிக்கல் கிராம நிர்வாக அலுவலர் பிரவீணா வந்தார். உதவி வன பயிற்சி பாதுகாவலர்கள் வெங்கடேஷ்பிரபு, செல்வகுமார் ஆகியோரும் அங்க வந்தாக்ள். எங்கள் முன்னிலையில் மருத்துவர்கள் இறந்துபோன சிறுத்தையை பிரேத பரிசோதனை செய்து சம்பவஇடத்தில் வைத்து சிறுத்தையின் உடலை எரியூட்டினோம். மருத்துவர்கள் சிறுத்தையின் உடலிலிருந்து எடுத்த சாம்பிள்களை பரிசோதனைக்கு அனுப்பினார்கள்.

4) அன்றையதினம் காலை 06.00 மணியளவில் எதிரிகள் முருகன் மற்றும் செல்வன் ஆகியோர் அந்த வழியாக அங்கு வந்தார்கள். அவர்களிடம் நாங்கள் விசாரித்தபோது தோட்டத்திற்கு பாத்ரூமிற்காக வந்ததாக சொன்னார்கள். சந்தேகத்தின் பேரில் எதிரிகளை பிடித்து நானும் வனவர் சபரீசனும் எங்கள் அலுவலகம் கொண்டு சென்று விட்டுவிட்டு மீண்டும் சம்பவஇடத்திற்கு வந்தபின்பு தான் மருத்துவர்கள் மற்றும் மேற்சொன்ன நபர்கள் வந்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u> - (**வாய்ப்பளித்தும் இல்லை**)

/ஒப்பம்/ R.அப்துல் சலாம்

நீதித்துறை நடுவர், குன்னூர்

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.No.42/2021**
Prosecution witness- **PW.5**

| | | | |
|---|---|---|---|
| Name | : Prabu | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : 12:25 p.m. to 12:30 p.m. | | |

**(Accused A2 present. A1 absent. Petition U/s.355 of BNSS filed through Online, allowed. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 29.05.2025

29.05.2025 முதல் விசாரணை

நான் குன்னூர் சோலட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். சேலாஸ் செல்லும் வழியிலுள்ள ஏவிடி எஸ்டேட்டில் மெக்கானிக்ககாக பணிபுரிந்து வருகிறேன்.

1) 06.11.2020ம் தேதி இரவு 08.00 மணியளவில் ஏவிடி எஸ்டேட்டிற்கு அருகிலுள்ள எனது தோட்டத்திற்கு எனது மாடுகளை பார்க்க சென்றபோது எனது தோட்டத்து பவுண்டரியில் சிறுத்தை ஒன்று இறந்துகிடந்தது. இரவு 08.10 மணியளவில் வனச்சரக அலுவலகத்திற்கு போன் செய்து அந்த தகவலை கூறினேன். இரவு 08.30 மணியளவில் வனச்சரக அலுவலகத்தை சேர்ந்த இரண்டுபேர் சம்பவஇடத்திற்கு வந்தார்கள்.

குறுக்கு விசாரணை - (**வாய்ப்பளித்தும் இல்லை**)

/ஒப்பம்/ R.அப்துல் சலாம்

நீதித்துறை நடுவர், குன்னூர்